முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1087

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.09.2022, செவ்வாய்கிழமை

1. பரமானந்த ஞான சதாசிவ குருவே
   பாருலகை காக்க வந்த ஆறுமுகன் என் அவதாரமே
   வரம்பல பெற்று உலகோரை மீட்கும்
   வள்ளலாக கலியில் வாழுகின்ற ஞானகுருவே
2. குருவே அரங்கனே உந்தனுக்கு
   குறையிலா ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 03 நாள், 20.09.2022 செவ்வாய்கிழமை)
   ஆறுமுகப் பெருமான் யானும்
   இனிதே தொடர்ந்து உரைப்பேன்
3. அப்பனே கலியின் துன்பங்களை
   அகற்றி காக்கும் மகா சக்தி நீ
   சக்திமிகு மா தர்மத்தை மக்களை நோக்கி
   சாற்றிடுவேன் பாதுகாப்பு அறனாக இட்டு வருகின்ற
4. உத்தம ஞானியே ஓங்கார பலம் கொண்ட
   உயர் அவதாரமே உந்தனுக்கு ஆறுமுகன்
   பெருமைபட நித்தம்நித்தம் வரம்
   பிசகின்றி மகாசக்தி தந்து வர
5. வருகின்ற உன் வழி தொண்டர்களை கொண்டு
   வையகத்தை ஆறுமுகன் மாற்றுவேன்
   தருகின்ற சக்தி மக்களுக்கெல்லாம் பெருகி தரணியே தர்மஞானலோகமாகும்
   ஆகுகின்ற அற்புதத்தை ஆறுமுகன்யான் அரங்கன் உன் மூலமேநடத்தி அதிசயம் நிகழ்த்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–